இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 03-06-2025

# மதுரை மண்ணில் மகத்தான முழக்கம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயமாம் பொதுக்குழு மதுரை மண்ணில் நடைபெற்றுள்ளது. கழகத்தின் ரத்தநாளங்களாக இருக்கக் கூடிய பொதுக்குழு உறுப்பினர்களுக்காக கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை மகத்தான உரையாக அமைந்திருந்தது.

பேரறிஞர் அண்ணா பேசுகிறாரா? தமிழினத் தலைவர் கலைஞர் உரையாற்றுகிறாரா? இனமானப் பேராசிரியரின் குரலா அது? - என்றெல்லாம் சொல்லத்தக்க வகையில் அமைந்திருந்தது திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது உரை!

**ஒரு தலைவர் தொண்டர்களின் நிலையில் இருந்து பேசினார். ஒரு மாநிலத்தை ஆளும் முதலமைச்சர், மக்களின் நிலையில் இருந்து பேசினார். ஒரு தமிழர், தமிழ்நாட்டுக்காகப் பேசினார். இந்தியாவுக்காகப் பேசினார். தமிழ்நாட்டின் வளத்துக்கும் நலத்துக்கும் பேசினார். இந்தியாவின் எதிர்கால நன்மைக்காகவும் பேசினார். ஒரே உரையில் இத்தனை பரிமாணங்களைப் பார்க்க முடிந்தது. எந்த அரசியல் கட்சித் தலைவரும், எந்த மாநிலத்து முதலமைச்சரும் இத்தகைய பொது நோக்கத்தோடு பேசி இருக்க முடியாது.**

அதனால்தான், 'திராவிட முன்னேற்றக் கழகம் சராசரி அரசியல் கட்சியல்ல' என்று சொன்னார். எத்தனையோ அரசியல் கட்சிகள் வரும், போகும். வந்திருக்கிறது, போயிருக்கிறது. அவர்கள் தோன்றியதற்கும் காரணம் இல்லை, அழிந்து போனதற்கும் காரணம் சொல்லத் தேவையில்லை. ஆனால் ஒரு அரசியல் இயக்கம் கொள்கைக்காகத் தோன்றியது. கொண்ட கொள்கையை வெற்றி பெற வைப்பதற்காகத் தோன்றியது.

'நாங்கள் அசாதாரணமானவர்கள். இந்த நாட்டில் நிலவும் அசாதாரணச் சூழல் தான் எங்களை உருவாக்கியது. இந்தக் காலம் மாறும் வரை எங்கள் தேவைகள் இருக்கும். எங்களுக்கான தேவைகள் இருக்கும் வரை நாங்களும் இருப்போம்' என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

**சமுதாய சீர்திருத்தம் பேசியவர்கள், தேர்தலுக்கு நின்று ஆட்சியைப் பிடித்ததும், தன் கையில் கிடைத்த அரசியல் அதிகாரத்தை நிர்வாக நோக்கங்களுக்காக மட்டுமல்லாமல், சீர்திருத்த நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறப்பாகும். எந்தக் கொள்கைக்காக போராடி, வாதாடி, சிறைக்குப் போனார்களோ அந்தக் கொள்கைக்கான சட்டத்தை இயற்றியதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமை ஆகும்.**

தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் வாதாடியது தி.மு.க. அண்ணா முதலமைச்சராக வந்து சட்டம் போட்டார். சுயமரியாதைக் கொள்கையை நாடு முழுவதும் பேசினார் அண்ணா. சுயமரியாதைத் திருமணம் செல்லும் என்று சட்டம் போட்டவரும் அவரே. இந்தியை எதிர்த்து இருபது ஆண்டுகள் போராடியது தி.மு.க. தமிழும் ஆங்கிலமும் தான், இந்திக்கு இங்கு இடமில்லை என்று சட்டம் போட்டார் அண்ணா. சமூகநீதிக்காக போராடிய இயக்கம் தி.மு.க. அனைத்து வகையிலும் சமூகநீதியை நிலைநாட்டி வருகிறது தி.மு.க. அரசு. அனைத்துச் சாதியினரையும் கோயில் அர்ச்சகர் ஆக்கியது திமுக. வீட்டுமனை குடியிருப்போருக்குச் சொந்தம் என்றதும், 2 ஏக்கர் நிலம் தந்ததும் கலைஞர் அரசு. இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்கு வழங்கியதும் கலைஞர் அரசே. பெண்ணுரிமை பேசிய இயக்கத்தின் ஆட்சியில்தான் மகளிருக்குச் சொத்துரிமையும், மகளிருக்கு உரிமைத் தொகையும் வழங்கப்பட்டது. கல்வி எனும் நீரோடையை ஒவ்வொரு இல்லமும் கொண்டு போய் சேர்த்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**"நாம் வழக்கமான அரசியல் கட்சி அல்ல, அரசியல் கட்சிகள் வரும், போகும். நாம் ஒரு கொள்கைக்காக இயக்கத்தை உருவாக்கியவர்கள். அந்தக் கொள்கைக்காக வாழ்கிறவர்கள். கொள்கையைப் பரப்ப, கட்சியும், கொள்கையை வென்றெடுக்க ஆட்சியும் தேவை என்று நினைப்பவர்கள். கொள்கைக் கூட்டம் இது என்பதால் தான் எந்தக் கோமாளிக் கூட்டத்தாலும் நம்மை வெல்ல முடியாது"** என்று மதுரையில் முழங்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**"இது வழக்கமான பொதுக்குழு அல்ல, வாகை சூடுவதற்கு வியூகம் வகுக்கும் பொதுக்குழு ஆகும். அடுத்த ஆண்டு இதே நாளை நினைத்துப் பாருங்கள். நாம் அனைவரும் வெற்றிக் கொண்டாட்டத்தில் இருப்போம். ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடித்தது என்ற வெற்றிச் செய்தி நம்மை வந்து அடைந்திருக்கும். 200 தொகுதிகளுக்கு மேல் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி என்ற வெற்றிச் செய்தியை நாம் பெற்றிருப்போம். இரண்டாவது முறையாக திராவிட மாடல் ஆட்சி தொடர்கிறது என்ற செய்தியை நாம் பெற்றிருப்போம். அதற்கான வியூகத்தை வகுக்கும் பொதுக்குழு இது"** என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** இந்த நான்காண்டு காலத்தில் தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்துக்கும் நலம் பயக்கும் திட்டங்களை உருவாக்கித் தந்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். அந்தத் திட்டங்களின் பயனை மீண்டும் நினைவூட்டுவதே மாபெரும் பரப்புரை ஆகும்.**

*** இது வரை அடையாத உயரத்தை தமிழ்நாடு அடைந்துள்ளது. தி.மு.க. ஆட்சி தொடர்ந்தால் மட்டும் தான் இந்த உயரம் தக்க வைக்கப்படும்.**

*** தமிழ்நாட்டைக் காக்க வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தொடர வேண்டும். கொத்தடிமை எடப்பாடி பழனிசாமி கூட்டத்தை முன் வைத்து, பாசிச பா.ஜ.க. தமிழ்நாட்டில் காலூன்றப் பார்க்கிறது. அதனை அனுமதிக்கக் கூடாது.**

*** பாசிச பா.ஜ.க. கூட்டத்துக்கு தமிழ்நாடு எந்தக் காலத்திலும் அடிபணியாது - என்பதை அழுத்தம் திருத்தமாக எச்சரிக்கை முழக்கமாகச் சொன்னார் திராவிட நாயகன்.**

200 வெல்வோம் என்பதை, 'எதிரிகளே இல்லை என்ற ஆணவமாகச் சொல்லவில்லை, என்னரும் உடன்பிறப்புகள் மீதுள்ள நம்பிக்கையால் சொல்கிறேன்' என்றார் தலைவர்.

**தொண்டர்களின் பலத்தால் காலூன்றி - பொதுமக்களின் நம்பிக்கையால் தலைக்கு மேல் தூக்கி நிறுத்தப்பட்டுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவரது மதுரை பொதுக்குழு உரையானது தொண்டர்களின் குரலாக, பொதுமக்களின் குரலாக அமைந்தது. தமிழ்நாடு சிறக்க, இந்தியாவைக் காக்க 2026ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி வாகை சூடுவோம்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.6.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025–26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.6.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025–26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் நிகழ்வினை தொடங்கிவைத்து, திறன்மிகு வகுப்பறையில் மாணவர்களுடன் அமர்ந்து ஆசிரியர் நடத்திய பாடத்தினையும் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.6.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025–26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 2025 - 26 ஆம் ஆண்டிற்கு

# மாணவ - மாணவியர்க்கு பாடநூல்கள், சீருடைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 3 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.6.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடி கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துதல், பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறன் வகுப்பறைகள் அமைத்தல், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைத்தல், மாதிரி பள்ளிகளை உருவாக்குதல், காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லாப் பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்களோடு, புத்தகப்பைகள், காலணிகள் (Footwear's), காலேந்திகள் (Shoes), காலுறைகள், மழைக்கோட்டுகள், கம்பளிச்சட்டைகள், வண்ணப் பென்சில்கள், கிரையான்ஸ், கணித உபகரணப் பெட்டிகள், கணுக்காலேந்திகள் (Ankle boot) மற்றும் புவியியல் வரைபடங்கள் என பல்வேறு கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறது.

2025-26ஆம் கல்வியாண்டில் சுமார் 311 கோடி ரூபாய் மதிப்பிலான 4.30 கோடி பாடநூல்கள், சுமார் 457 கோடி ரூபாய் மதிப்பிலான 1.3 கோடி சீருடைகள், 162 கோடி ரூபாய் மதிப்பிலான 9.6 கோடி நோட்டுப் புத்தகங்கள் மற்றும் 211 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு கல்வி உபகரணங்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்கள், சீருடைகள் மற்றும் பல்வேறு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வை தொடங்கி வைத்தார்.

இதனையடுத்து, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மாணவ, மாணவியர்களுக்கு பாடநூல்கள், சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பல்வேறு கல்வி உபகரணங்களை வழங்குவர்.

முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்கள், சீருடைகள் மற்றும் பல்வேறு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வை தொடங்கி வைத்து, அவர்களுடன் கலந்துரையாடினார். அதைத் தொடர்ந்து, திறன்மிகு வகுப்பறையில் மாணவர்களோடு அமர்ந்து ஆசிரியர் நடத்திய பாடத்தினையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்க கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.